ஸ்ரீ:

# நூற்றெட்டுதிருப்பதிப்பாடல்கள்

ஸேதுஸமஸ்தான மஹாவித்வான்,பாஷாகவிசேகரர்
**ரா.இராகவையங்காரவர்கள் இயற்றியவை**

----------------

## திருமால் நிலை

சித்தர் முத்தர் தொழற்குவை குந்தத்தி
    னீடி ருக்கும்ப ராபரன் ஞானியர்
சித்தம் வைக்கவி யூகமெ டுத்தெங்குந்
    திகழ்வ னாகிய றத்திற்க வதரித்
தத்தி விக்கணுளார்தொழப் பாற்கட
    லங்கணுற்றனை வர்க்குந்தொ ழற்கென
இத்தரைக்கட் டிருப்பதி நூற்றெட்டி
    லெழில ருட்படி வங்கொண்டி ருக்குமே .1.

## சோழநாட்டுத்திருப்பதிகள்-40

தேவாதியர் தொழவாவல்கொள் பூலோகவை குந்தம்
    திருமால்வரு குடகாவிரி நடுவேவளர் கோயிற்
சீரின்பவ ரங்கம்முறை யூரன்பில்கு டந்தை
    தேருத்தம னூர்வெள்ளறை பேர்நற்சிறு புலியூர்
பூவாழ்திரு நறையூர்புகழ் மாவாலிமெய் நந்தி
    புரவிண்ணகர் சேறைகண புரவிண்ணகர் புள்ளம்
பூதங்குடி திருவிந்தளூர் மாதஞ்சைய ழுந்தூர்
    பொன்னாண்மதி யங்கண்டியூர் தென்னாகைவண் புருடம்
கோவாதனூ ராற்றங்கரை தேவார்திரு வெளியங்
    குடிவாழ்கண மங்கைகண்ணங் குடிகாழிவெல் சித்ர
கூடந்திரு நாங்கூர்மணி மாடந்திரு வெள்ளக்
    குளங்கூடல்வை குந்தம்மரி வளங்கூடு விண்ணகரம்
தாவாதொளிர் திருத்தெற்றியம் பலஞ்செம்பொன்செய்கோயில்
    தளிக்காவளம் பாடிப்பதி யொளிக்காமணிக் கூடம்
தருத்தேன்வழி பார்த்தன்பள்ளி திருத்தேவனார் தொகையிற்
    தலமீரிரு பதுஞ்சோழர் தரைத்தெய்வத நிலனே .2.

## பாண்டிநாட்டுத்திருப்பதிகள்-18

திரமுயர் கூடல்கு றுங்குடி பேரை
    சீவர மங்கைமெய் யம்மலை கோளூர்
வரகுண மங்கைதண் கால்குரு கூர்நன்
    மாலிருஞ் சோலைபு லாணிகு ளந்தை
சுரர்திகழ் கோட்டிபு ளிங்குடி மோகூர்
    தொலைவிலி மங்கலம் புதுவைவை குந்தம்
பரவுபெரும்புகழ் விஞ்சிய பாண்டிப்
    பைந்தமிழ் நாட்டுப் பதிபதி னெட்டே .3.

## சேரநாட்டுத்திருப்பதிகள்--13

கருவூர்வித் துவக்கோடு கடித்தானம் மூழிக்
    களவாறன் விளைதிருவண் பரிசார நாவாய்
திருவாழு மனந்தபுரந் திகழ்குட்ட நாட்டுத்
    திருப்புலியூர் வாட்டாறு திருச்செங்குன் றூர்கோள்
மருவாத திருவல்ல வாழ்திருவண்வண்டூர்
    வாய்ந்ததிருக் காட்கரையென் றாய்ந்த பதின்மூன்றும்
அருகாத புகழ்படைத்த கொடைச்சேரர் நாட்டி
    லரும்பெரிய கடவுள்வளர் பெரும்பதிகளாமே .4.

## நடுநாட்டுத்திருப்பதிகள்--2

நெடுமா லயிந்தை
    யொடுகோவ லூரை
முடிசூடு மலையன்
    நடுநாடு கொளுமே. .5.

## தொண்டைநாட்டுத்திருப்பதிகள்---24

ஊரக மட்டபு யகர மத்தி
    யூர்கச்சி வேளுக்கை பாடகந் தண்கா
நீரகம் புட்குழி நீர்மலை வெஃகா
    நின்றவூ ரெவ்வு ளிலாதிங்கட் டுண்டம்
காரக மிடவெந்தை கள்வனூர் கடிகை
    கடன்மல்லை திருவல்லிக் கேணிகார் வானம்
வார்பர மேச்சுர விண்ணகர் பவள
    வண்ணநல் வேங்கடந் தொண்டையெண் மூன்றே .6.

## வடநாட்டுத்திருப்பதிகள்----11

பரவு மிமையப் பொருப்பிற பிருதி
பதரிது வாரகை நைமிசா ரண்யம்
கருதும யோத்திவி ருந்தாவ னந்தான்
கங்கைக்க ரைக்கண்டம் சிங்கவேள்குன்றம்
பொருவருங் கண்ணன் பொருந்தாயர் பாடி
பொன்திகழ் சாளக்கி ராமம்ம துரை
மருவிய சீர்வட நாட்டினிற் றெய்வம்
வளர்பெருங் கோயில்கள் வாழ்பதி னொன்றே .7.

## ஆக்கியோன் பெயர்

ஒருசோழர் வளநாட்டி லுயர்நாற்ப தூர்கள்
ஒளிர்பாண்டி வளநாட்ட லூரீரொன் பதுதாம்
தருசேரர் பெருநாட்டிற் பதின்மூன்று தலங்கள்
தனியாய நடுநாட்டிற் றலமொன்றோ டொன்று
வருபாலி வளர்தொண்டை வளநாட்டெண் மூன்றூர்
வடநாட்டிற பதினொன்றென் றொருநூற்றோ டெட்டும்
திருவாரு மணிமார்பன் திருக்கோயி லென்று
தெளிநூலின் வழி**ராக வ**னிதோ தினானே .8.

## பயன்

உண்ட முதல்வ னுயரருளே யூற்றெடுத்து
மண்டி வழிந்ததென வண்பெரியார்---விண்ட
திருப்பாடல் பெற்ற திருப்பதிநூற் றெட்டும்
விருப்பாயி னார்பெறுவர் வீடு.